# திருவண்ணாமலை மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள் பிறப்பிப்பவர்:திரு.சண்.செல்வபாலாஜி.பி.இ.,

**ந.க.எண். 2350/2026/எப்1** **நாள்.12.05.2026**

**பொருள்:** மனை உட்பிரிவு – திருவண்ணாமலை மாநகராட்சி – மாநகராட்சியுடன் புதியதாக இணைக்கப்பட்டுள்ள சமுத்திரம் – புல எண்.22/1A1B, 22/1B1B & 22/2–ல் 0.18.57 ஹெக்டர் (0.45 ஏக்கர்) பரப்பளவு தனியார் நிலத்தை – மனை உட்பிரிவிற்கு ஒப்புதல் அளித்தல் – தொடர்பாக.

**பார்வை:**

1. அரசாணை (நிலை) எண்.141 (வீட்டு வசதித்துறை), நாள்.16.07.2022.
2. உதவி இயக்குநர், நகர் ஊரமைப்பு, திருவண்ணாமலை அவர்களின் தொழில் நுட்ப அனுமதி கடிதம் ந.க.எண். KDBQYPP5/TVM/2026/TCP, நாள்.06.04.2026.
3. திருமதி.N.சங்கீதா சமுத்திரம், திருவண்ணாமலை என்பவரின் விண்ணப்பம் நாள். 08.04.2026.
4. இணை சார் பதிவாளர், திருவண்ணாமலை அவர்களின் அலுவலக ஆவண எண்.6521/2014.
5. திருவண்ணாமலை மாநகராட்சி கருவூல பற்றுச் சீட்டு எண்.040/TM6/1/26–27/0001297, நாள்.08.05.2026.

******

**உத்தரவு:**

திருவண்ணாமலை மாநகராட்சிப் பகுதியுடன் புதியதாக இணைக்கப்பட்டுள்ள சமுத்திரம், புல எண்.22/1A1B, 22/1B1B & 22/2–ல் 0.18.57 ஹெக்டர் (0.45 ஏக்கர்) பரப்பளவு தனியார் நிலத்தை மனைகளாக அபிவிருத்தி செய்யும் நோக்கில், பார்வை 2–ல் காணும் கடிதத்தில், உதவி இயக்குநர், நகர் ஊரமைப்பு, திருவண்ணாமலை அவர்களின் தொழில்நுட்ப அனுமதி பெற்று, பார்வை 3–ல் காணும் விண்ணப்பத்தில், திருமதி.N.சங்கீதா என்பவரின் மனை உட்பிற்கு ஒப்புதல் வழங்க கோரியுள்ளார்.

பார்வை 4–ல் காணும் இணை சார்பதிவாளர், திருவண்ணாமலை அவர்களின் அலுவலக ஆவணத்தின் படி மேற்படி உட்பிரிவிற்காக, உதவி இயக்குநர், நகர் ஊரமைப்பு, திருவண்ணாமலை அவர்களின் தொழில்நுட்ப அனுமதியில் ஒதுக்கப்பட்ட சாலைகள் மற்றும் பொது உபயோக இடங்கள் மாநகராட்சி ஆணையாளருக்கு தானமாக வழங்கப்பட்டுள்ளது.

இம்மாநகராட்சியில் கருவூலப் பற்றுச்சீட்டு எண்.040/TM6/1/26-27/0001297, நாள்.08.05.2026-ன் படி கட்டணமாக ரூ.1,44,336/-ஐ (ஒரு லட்சத்து நாற்பத்து நான்காயிரத்து முன்னூற்று முப்பத்தாறு ரூபாய் மட்டும்) விண்ணப்பதாரர் திருமதி.சங்கீதா என்பவரால் செலுத்தப்பட்டுள்ளது.

ஆகவே, திருவண்ணாமலை மாநகராட்சியுடன் புதியதாக இணைக்கப்பட்ட சமுத்திரம் புல எண். 22/1A1B, 22/1B1B & 22/2-ல் 0.18.57 ஹெக்டர் (0.45 ஏக்கர்) பரப்பளவு தனியார் நிலத்தை 01 முதல் 08 வரை உட்பிரிவு செய்து மனைகளாக மற்றம் செய்வதற்கு உதவி இயக்குனர், நகர் ஊராமைப்பு திருவண்ணாமலை அவர்களின் கடிதத்தில் அளித்துள்ள தொழில் நுட்ப அனுமதியில் குறிப்பிடப்படுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு இறுதி ஒப்புதல் அளித்து இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

ச.செல்வ பாலாஜி.பி.இ.,
(ஓம்) ஆணையாளர்,
திருவண்ணாமலை மாநகராட்சி

**பெறுநர்:-**

திருமதி.N.சங்கீதா
எண்.402/105,
தேரடி தெரு,
திருவண்ணாமலை - 606 601.

**நகல்:-**

1. வட்டாட்சியர், திருவண்ணாமலை
2. இணை சார்பதிவாளர், திருவண்ணாமலை
3. வருவாய் ஆய்வாளர், திருவண்ணாமலை மாநகராட்சி
4. The Chairman, Tamil Nadu Real Estate Regularity Authority, No.1A, CMDA Tower II, 1st Floor, Egmore, Chennai -08

**// உண்மை நகல் //**

12/05/2026

**உதவி நகர திட்டமிடுபவர்**
**திருவண்ணாமலை மாநகராட்சி**

12/05/2026